# DEPOSITION OF WITNESS

## ( Chapter XXIII Code of Criminal Procedure )

--

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PUDUKKOTTAI.

| | | | |
|---|---|---|---|
| வழக்கு எண். | SC No.183/2022 | அரசுத்தரப்பு | P.W.1 |
| பெயர் | முத்து | கிராமம் | |
| தந்தை / கணவர் பெயர் | கதிர்வேல் | வட்டம் | |
| வயது | | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.09.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. நான் புதுக்கோட்டை போஸ்நகர் 1ம் வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி புக்கிங் ஏஜென்ட்டாக வேலை செய்துவருகிறேன். இநத் வழக்கின் வாதி சக்திவேல் என்பவரை எனக்கு தெரியாது. என் முன்பாக போலிசார் எந்தவொரு நபரையும் கைது செய்யவில்லை. இந்த வழக்கு பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஜெயசுமன் என்பவர் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அது அசாஆ-1. அதை தொடர்ந்து கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்தும் என்னுடையது தான். அந்த கையெழுத்து அ.சா.ஆ-2. காவல் நிலையத்தில் வைத்துதான் மேற்படி கையெழுத்தை போட்டுககொடுத்தேன். போலிசார் இநத் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய கேட்டுக்கொண்டதன்பேரில் அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

போலிசார் என்னை விசாரித்தபோது கடந்த 16.01.2021 தேதியில் நானும் என்னுடைய நண்பர் சக்திவேல் என்பவரும் புதுக்கோட்டை சின்னப்பா பூங்காவில் இருந்து புதுக்கோட்டை திருக்கட்டளை செல்லும்ரோட்டில் பாலு ஆட்டோ கேரேஜ் பழைய கட்டிடத்தின் முன்பு நின்று கொண்டிருந்தபோது கணேஷ்நகர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் மற்றும் போலிசார் ஆனந்தன் மற்றும் செல்வபாண்டியன் ஆகியோர் அங்கு வந்தார்கள் என்றும் அப்போது அவர்களை கண்டவுடன் ஒரு நபர் ஓட முயற்சித்தார் என்றும் அவரை போலிசார் மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் ஜெயசுமன் என்றும் போதை மாத்திரைகளை

குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று வருவதாக சொன்னதின்பேரில் போலிசார் எங்கள் முன்பாக அவர் கொடுத்த ஒப்பதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள் என்றும் அதற்கு சாட்சியாக இருந்து தான் நானும் சக்திவேல் என்பவரும் ஜெயசுமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை தொடர்ந்து எங்கள் முன்னிலையில் எதிரி ஜெயசுமன் தான் வைத்திருந்த Becalm போதை மாத்திரைகள் 10ம் Sterilwater pouch 3ம், சிரஞ் 2ம், போதை மாத்திரை விற்ற பணம் ரூ-100/-ம் ஆஜர் செய்ததை போலிசார் மகஜரில் கைப்பற்றினார்கள் என்றும் அதற்கு சாட்சியாக இருந்துதான் கைப்பற்றுதல் மகஜரில் நானும் சக்திவேல் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னிடமும் சக்திவேலிடமும் விசாரணை செய்துதான் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும் தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக உண்மை சங்கதிகை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிதரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை.

Sd/–முத்து

| |
|---|
| சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.<br>Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,<br>தலைமை நீதித்துறை நடுவர்,<br>புதுக்கோட்டை. |